## Melakarthas - The Gems of Carnatic Music

# கர்னாடக இசையின் முத்துக்களான மேளகர்த்தா ராகங்கள்

**பாகம் 1; 1 முதல் 36 ராகங்கள்**

• **வித்யா பவானி சுரேஷ்;**

**ஸ்கந்தா பப்ளிகேஷன்ஸ், தொலைபேசி: 044-2466 1661.**

கர்னாடக இசையை படிப்பவர்களுக்கும் கச்சேரி செய்பவர்களுக்கும் பயன் அளிக்கும் வகையில் எழுதப்பட்டிருக்கும் நூல் இது. நூலாசிரியர் வித்யா பவானி சுரேஷுக்கு இசை மற்றும் நடனத் துறைகளில் இருக்கும் அனுபவம், இந்த நூலை எவரும் விளங்கிக் கொள்ளும் வகையிலான ஆங்கில மொழி நடையில் எழுதுவதற்கு காரணமாக அமைந்திருக்கிறது.

கர்னாடக இசையில் தாய் ராகம், ஜனக ராகம் எனப் பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் 72 ராகங்களை மேளகர்த்தா ராகங்கள் என்பர். இவற்றில் 32 மேளகர்த்தா ராகங்களைப் பற்றிய விரிவான அறிமுகத்தை இந்நூல் வழங்குகிறது. மேளகர்த்தா ராகமாக அழைக்கப்படுவதற்கு என்னென்ன பண்புகள் இருக்க வேண்டும், அந்த ராகங்களின் ஸ்வரஸ்தானங்கள் எப்படியெல்லாம் அமைந்திருக்க வேண்டும், நம்முடைய முன்னோடிகள் மேளகர்த்தா ராகங்களை எப்படியெல்லாம் கையாண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் கையேடு போன்ற இந்த நூலில் பதிவு செய்திருக்கிறார் வித்யா பவானி சுரேஷ். கர்னாடக இசையைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கும் அதன் ராக அமைப்புகளைப் பற்றிப் புரிந்து கொள்வதற்கும், ஆங்கிலத்தில் எழுதப் பட்டிருக்கும் இந்நூல் உங்கள் கைவிரலைப் பிடித்து அழைத்துச் செல்லும்!

